# முறையற்ற நிலப்பயன்பாட்டின் தாக்க மதிப்பீடு - வவுனியா மாவட்டத்தின் திருநாவற்குளம் கிராமம் பற்றிய சிறப்பு பார்வை


ஆய்வுச் சுருக்கம்

உலகளாவிய ரீதியில் நகராக்கமும் அதனுடன் இணைந்த பிரச்சினைகளும் உயர்வடைந்து வருகின்றன. இலங்கையிலும் அந்நிலையே காணப்படுகின்றது. வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை நகரப்பகுதியை அண்டிய குளங்களில் ஆக்கிரமிப்பு செய்து அங்கு குடியேற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளது. 30 வருடங்களாக தொடர்ந்த யுத்தத்தின் விளைவாக இடம்பெயர்ந்து வந்த மக்கள் காணியற்றவர்களாக காணப்பட்டதால் இவ்ஆக்கிரமிப்பு பகுதிகளில் அத்துமீறி காணிகள் தொடர்பான ஆவணங்கள் ஏதுமின்றி குடியேறினர். இந்த பிரதேசங்களில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே இவ்வாய்வானது திருநாவற்குளம் கிராமமும் இவ்வாறான பகுதியாக உள்ளதால் அதன் நிலப்பயன்பாடுகள் எவ்வாறு உள்ளன, நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் எவை, அவற்றால் உண்டான தாக்கங்கள் எவை, இதற்கு எவ்வாறான தீர்வுகளை முன்வைக்கலாம் எனும் வகையான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அத்தியாயப்படுத்தி விபரிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகளும் தகவல்களும் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளுக்கூடாக சேகரிக்கப்பட்டது. முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் என்பவற்றின் மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகளாக பிரதேசத்தின் வரைபடங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவ் ஆய்வு வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் பெறப்பட்ட தரவுகளை மையமாகக் கொண்டு Arc map 9.1 > Arc View 3.2, Arc map 10 ஆகிய புவியியல் தகவல் முறைகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.